**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-37** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சிதம்பர பாரதி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை, முதலமைச்சர் பாதுகாப்பு பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.12.2020 அன்று வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண். 778/2020, ச/பி. 147இ 148, 302 இதச வழக்கின் வழக்குக்கோப்பை உதவி ஆய்வாளர் திரு.அருள்செல்வன் என்பவரிடமிருந்து எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடமான மூலிமங்கலம் பிரிவு, 99 காபி கபே என்ற இடத்திற்கு இரவு 10.30 மணிக்கு சென்று பார்த்தபோது, சாட்சிகள் இல்லாததாலும், சம்பவ இடம் இருட்டாக இருந்ததாலும், சம்பவ இடத்தை பார்வையிட முடியாமல் திரும்பி வந்தேன்.

பின்னர், 18.12.2020 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று, வரவழைக்கப்பட்ட சாட்சிகள் விஜய் ஆனந்த், தனலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.39.

பின்னர், அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் சிறிதளவு, TN 45 BB 5151 என்ற பல்சர் இருசக்கர வாகனம், இரத்தக்கறை படிந்த Woodland என எழுதியிருந்த கருப்பு கலர் செருப்புகள் ஒரு ஜோடி, VKC PRIDE செருப்புகள் ஒரு ஜோடி, அறுந்த நிலையில் இருந்த தங்க செயின் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து, கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் சிறிதளவு, TN 45 BB 5151 என்ற பல்சர் இருசக்கர வாகனம், இரத்தக்கறை படிந்த Woodland என எழுதியிருந்த கருப்பு கலர் செருப்புகள் ஒரு ஜோடி, VKC PRIDE செருப்புகள் ஒரு ஜோடி, அறுந்த நிலையில் இருந்த தங்க செயின் ஆகியவை நீதிமன்றத்தில் உள்ள ஏற்கனவே

குறியீடு செய்யப்பட்ட முறையே சா.பொ.1 முதல் 6 ஆகும்.

பின்னர், சாட்சிகள் ரமேஷ், ராமர், சிவக்குமார், விஜய் ஆனந்த், தனலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், வழக்குச்சொத்துக்களை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், 9.00 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.40

பின்னர், சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் மூலம் பிரேதத்தை, பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் 11.30 மணிக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், அங்கிருந்த சாட்சிகள் ரமேஷ், சுகுணா, காளியம்மாள், மாரியாயி, மோகன்ராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், மீண்டும் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அரசக்குமார், முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், அன்றைய தினம் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் என்பவர் பிரேத பரிசோதனைக்கு பின்னர், பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உடைகளான கருப்பு நிற புளூ நிறத்தில் எழுதப்பட்ட டிராயர் ஒன்று, வெள்ளை நிற முண்டாபனியன், மஞ்சள்கலர் முழுக்கை சட்டை ஆகியவற்றை படிவம்-95 ல் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய டிராயர் ஒன்று, வெள்ளை நிற முண்டாபனியன், மஞ்சள்கலர் முழுக்கை சட்டை ஆகியவை முறையே சா.பொ.10 முதல் 12.

பின்னர், 19.12.2020 அன்று இவ்வழக்கில் மேல்விசாரணை

மேற்கொண்டு, எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், நொய்யலில் உள்ள செல்லாண்டியம்மன் கோவில் முன்பு வைத்து எதிரிகள் கலையரசன், பிரசாத், 3 ம் எதிரி பிரசாந்த், 4 ம் எதிரி ஷேக்தாவூத், 5 ம் எதிரி கோகுல்நாத் ஆகியோர்களை காலை 6.30 மணிக்கு சாட்சிகள் பூபதி, அருண்முகுமார் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, எதிரிகளை தனித்தனியாக விசாரித்தபோது, 7.30 மணிக்கு 1 ம் எதிரி கலையரசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர், 9.35 மணிக்கு 2 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், 11.00 மணிக்கு 3 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், 12.45 மணிக்கு 4 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், 14.30 மணிக்கு 5 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

பின்னர், 1 ம் எதிரி கலையரசன் ஆஜர்படுத்திய கருப்பு நிற TN 47 AT 5008 என்ற TVS STAR SPORT இருசக்கர வாகனத்தையும், இரத்தக்கறை படிந்த வெள்ளைபார்டர் கொண்ட கருப்பு வேட்டி ஒன்றையும், அதே சாட்சிகள் முன்னிலையில் 16.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய TVS STAR SPORT இருசக்கர வாகனத்தையும், இரத்தக்கறை படிந்த வெள்ளைபார்டர் கொண்ட கருப்பு வேட்டி ஒன்று முறையே சா.பொ.13 மற்றும் 21.

பின்னர், 2 ம் எதிரி ஆஜர் செய்த TN 47 AQ 8502 என்ற பதிவு எண் கொண்ட கருப்பு நிற பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தையும், புளூ சிமெண்ட் கலர் கலந்த ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய கருப்பு நிற பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தையும், புளூ சிமெண்ட் கலர் கலந்த ஜீன்ஸ் பேண்ட் முறையே சா.பொ.15 மற்றும் 14.

பின்னர், 3 ம் எதிரி பிரசாத் ஆஜர் செய்த TN 48 J 1796 என்ற

எண்ணுள்ள கருப்பு நிற Hero honda splender இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய இருசக்கர வாகனம் சா.பொ.16.

பின்னர், 4ம் எதிரி ஷேக்தாவூத் ஆஜர் செய்த பெரிய சூரிகத்தி ஒன்றையும், புளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய புளூகலர் ஜீன்ஸ் பேண்ட் சா.பொ.17.

பின்னர், 5ம் எதிரி கோகுல்நாத் ஆஜர் செய்த கருப்பு, வெள்ளை ஜோடோ கலந்த ஜீன்ஸ் பேண்ட் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய ஜீன்ஸ் பேண்ட் சா.பொ.18.

பின்னர், 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1ம் எதிரி எங்களை மூர்த்திபாளையம், ஆத்தூர் பிரிவு ரோடு அருகில் உள்ள ஏழு கன்னிமார் கோவிலுக்கு எதிரே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை, அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் 18.30 மணிக்கு கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய வீச்சருவாள் சா.பொ.20.

பின்னர், எதிரிகளை உரிய காவலுடன் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து, பின்னர், நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், 21.12.2020 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் என்பவரை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கடவுச்சீட்டு கொடுத்து, பிரேத பரிசோதனையில் சேகரிக்கப்பட்ட உடல் உறுப்புகளையும், பிரேதத்தில் சேகரிக்கப்பட்ட உடைகளையும் ஆய்வு செய்வதற்காக ஒப்படைக்க அனுப்பி வைத்தேன்.

பின்னர், அன்றைய தினமே எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, இவ்வழக்கின் 6 ம் எதிரி கிரிதரண் (எ) கிரி என்பவரை பகல் 13.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையப்பன்கோவில் அருகில் வைத்து கைது செய்து, சாட்சிகள் செல்வராஜ் மற்றும் தங்கமணி ஆகியோர் முன்னிலையில், விசாரித்தபோது, 6 ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 13.45 மணிக்கு பதிவு செய்தேன்.

பின்னர், 15.15 மணிக்கு 6 ம் எதிரி TN 47 AQ 9423 என்ற பதிவு எண் கொண்ட ஊதா நிறம் உள்ள இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

பின்னர், வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள 99 காபி கபே உரிமையாளர் திருமாவளவன் என்பவரை விசாரித்து, அவரது கடையிலிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்த பதிவுகளை சாட்சி குழந்தைவேல் என்பவர் மூலம் பதிவிறக்கம் செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியில் பதிவு செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியை பெற்றேன். சாட்சி குழந்தைவேல் என்பவர் அளித்த 65 பி சான்றிதழ் அ.சா.ஆ.41.

பின்னர், சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள அட்சயாபவன் ஹோட்டலில் பணிபுரிந்து வந்த புரோட்டா மாஸ்டர் கணேசன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரது கடையிலிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்த பதிவுகளை சாட்சி குழந்தைவேல் என்பவர் மூலம் பதிவிறக்கம் செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியில் பதிவு செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியை பெற்றேன். சாட்சி குழந்தைவேல் என்பவர் அளித்த 65 பி சான்றிதழ் அ.சா.ஆ.42.

பின்னர், வெங்கமேட்டில் உள்ள A1 பெட்ரோல் பங்க் உரிமையாளர் சாட்சி பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பெட்ரோல் பங்கில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில்

பதிவாகியிருந்த பதிவுகளை சாட்சி குழந்தைவேல் என்பவர் மூலம் பதிவிறக்கம் செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியில் பதிவு செய்து, பென்டிரைவ் மற்றும் சிடியை பெற்றேன். சாட்சி குழந்தைவேல் என்பவர் அளித்த 65 பி சான்றிதழ் அ.சா.ஆ.43.

பின்னர், மேற்சொன்ன கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, நீதிமன்றம் மூலம் சென்னை, தடய அறிவியல் ஆய்வகத்தில் உள்ள சைபர் செல் பிரிவிற்கு ஒப்படைப்பதற்காக முதல்நிலைக்காவலர் 163 சதீஸ்குமார் என்பவரை கடவுச்சீட்டு கொடுத்து அனுப்பி வைத்தேன்.

பின்னர், 22.12.2020 அன்று எனது புலன்விசாரணையை தொடர்ந்து, சாட்சிகள் பிரபு, முருகேசன் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

23.12.2020 அன்று சாட்சிகள் விஜய்ஆனந்தன், தனலெட்சுமி, பிரபு, முருகேசன், பிரகாஷ் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து, மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அன்றைய தினமே 12.35 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, இவ்வழக்கில் தொடர்புடைய 7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 8ம் எதிரி சீனிவாசன் ஆகிய இருவரையும், வேலாயுதம்பாளையம் பைபாஸ் சேலம் பஸ்நிறுத்தும் இடத்தில் வைத்து கைது செய்து, சாட்சிகள் விஜய்ஆனந்தன் மற்றும் தனலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் 7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி என்பவரை விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 12.45 மணிக்கு பதிவு செய்தேன்.

பின்னர், 8ம் எதிரி சீனி (எ) சீனிவாசன் என்பவரை அதே சாட்சிகள் முன்னிலையில் விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை

16.00 மணிக்கு பதிவு செய்தேன்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் படி, எதிரிகள் எங்களை மூர்த்திபைாளையம், மார்க்கெட் பிரிவு ரோடு அருகில் உள்ள ஏழுகன்னிமார்கோவில் எதிரில் உள்ள முட்புதருக்கு அழைத்துச்சென்று, அங்கு மறைத்து வைத்திருந்த சூரிகத்தியை 7ம் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த சூரிகத்தி சா.பொ.7.

பின்னர், 8ம் எதிரி அதே இடத்திற்கு அருகில் இருந்த முட்புதரில் மறைத்து வைத்திருந்த 27.5 செ.மீ. நீளமுள்ள சூரிகத்தியை எடுத்து ஆஜர் செய்ததை, அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய சூரிகத்தி சா.பொ.8

பின்னர், சாட்சிகள் விஜய்ஆனந்த், தனலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், எதிரிகள் மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையத்திற்கு திரும்பி, எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கும், சொத்துக்களை நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்தேன்.

பின்னர், 24.12.2020 அன்று சாட்சிகள் ரமேஷ், சுகுணா, காளியம்மாள், மாரியாயி, மோகன்ராஜ், வான்மதி ஆகியோர்களை மீண்டும் விசாரித்து, மறுவாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி சூர்யா (எ) உதயநிதி என்பவர் திருச்சி மத்திய சிறையில் வேறொரு வழக்கில் நீதிமன்றக்காவலில் உள்ள விவரம் தெரிந்து, அவரை சம்பிரதாய கைது செய்வதற்காக, நீதிமன்ற உத்தரவுப்பெற்று, 10.02.2021 அன்று திருச்சி மத்திய சிறைக்கு சென்று, சிறைக்கண்காணிப்பாளர் முன்னிலையில் 13.05 மணிக்கு எதிரி சூர்யா (எ) உதயநிதியை சம்பிரதாய கைது செய்து, பின்னர், நீதிமன்ற உத்தரவு பெற்று, PT வாரண்ட் பெற்று, எதிரியை 18.02.2021 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்னர், அன்றைய தினமே எதிரி சூர்யா (எ) உதயநிதியை நீதிமன்றக்காவலில் இருந்து போலீஸ் காவலில் எடுப்பதற்கு Crl.M.P.No. 122/2021 மனு தாக்கல் செய்து, நீதிமன்ற உத்தரவுப்பெற்று, அன்றைய தினமே எதிரியை போலீஸ் காவலுக்கு எடுத்து, 14.15 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று, அங்கு வைத்து சாட்சிகள் விஜய்ஆனந்த், தனலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் எதிரி உதயநிதியை விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரி எங்களை மூர்த்திபாளையம், ஆத்தூர் பிரிவு ரோடு அருகேயுள்ள ஏழுகன்னிமார் கோவில் எதிரே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சூரி கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை, 16.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய சூரி கத்தி சா.பொ.9.

பின்னர், எதிரி சூர்யா (எ) உதயநிதியை அன்றைய தினமே மீண்டும் நீதிமன்றக்காவலில் ஒப்படைத்தேன்.

பின்னர், இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித் மற்றும் எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ்கள் கேட்டு, வட்டாட்சியர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

பின்னர், 12.03.2021 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 302 இதச-லிருந்து 147, 148, 120(b), 302 இதச உ/இ. 3(1) (x), 3(1) (xi), 3(2) (v) பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சீர்திருத்தச்சட்டத்தின் கீழ் மாறுதல் செய்து, சட்டமாறுதல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் அனுப்பி வைத்த சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.44.

பின்னர், 12.03.2021 தேதியிட்ட கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணையின் படி வழக்குக்கோப்பை கரூர் ஊரக உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் வசம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

குறுக்கு விசாரணை

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்**,** சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதை வேறு தேதிக்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்தார்**.** அம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது**.** குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை**.** எனவே **குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.**

<u>**3** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

17.12.2020 அன்று நான் அரியலூர் மாவட்டத்தில் பாதுகாப்பு பணியில் இருந்து வந்தேன். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வான்செய்தி மூலம் கிடைத்த தகவலின்படி, பாதுகாப்பு பணியிலிருந்து அனுமதி பெற்று, அன்றைய தினம் இரவு காவல்நிலையத்திற்கு திரும்பினேன். 3 ம் எதிரி சம்பவத்தில் ஈடுபட்டார் என சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.9 பாலமுருகன் எனது விசாரணையில், சிடி மற்றும் பென்டிரைவ் ஆகியவற்றை கைப்பற்றும்போது பங்கிற்கு வெளியே இருந்தேன் என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

3 ம் எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும், அவரிடமிருந்து சான்றுபொருள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன இடத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் 3 ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும், 3 ம் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**6** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

6 ம் எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும், அவரிடமிருந்து சான்றுபொருள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்து, 6 ம் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன இடத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் 6 ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும், 6 ம்

எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர். சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.